அடைக்கல அன்னை சபைத் தலைமையகம், அரண்வாயல் குப்பம்,

திருவள்ளூர் மாவட்டம் - 602 025

**சுற்று மடல் எண்: 68** **நாள்: 30.07.2020**

**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**அடைக்கல அன்னை பெருவிழா நல்வாழ்த்துக்களை**

**உங்களுக்குத் தெரிவித்து தொடர்கிறேன்!**

ஒரு விசித்திரமான சூழலில் நாம் நமது தாய்

அடைக்கல அன்னையின் விழாவைக் கொண்டாடத் தயாராகிறோம்.

அன்னையின் விழா முன் எப்போதையும் விட இச்சூழலில் நமக்குப்

புதிய நம்பிக்கைத் தளிர்களைத் துளிர்க்கச் செய்ய வேண்டும்.

எனவே அன்னையின் விழா நமக்கு விடுக்கும் அழைப்பை அன்போடு ஏற்று

உருமாற்றம் பெறத் தயாராவோம்

## முதலில் ஆழ்ந்த இறைப்பற்றுக்கான அழைப்பு

இறைப்பற்று என்ற உடனே நம் எல்லோருக்கும்

ஒரு வித மனதிருப்தி ஏற்படுகிறது. காரணம்

நாம் விரும்பியோ விரும்பாமலோ அன்றாடம் சில செபங்களைச் செபிக்கிறோம்.

பக்தி முயற்சிகளில் ஈடுபடுகிறோம். இதனால்

நாம் இறைப்பற்று உடையவர்கள் என்று கற்பனை செய்து கொள்கிறோம்.

இறைப்பற்று என்பது இறைவனில் நிலைபெயராமல் ஊன்றியிருப்பது.

ஒவ்வொரு கணமும் அவரது பிரசன்னத்தில் வாழ்வது.

இறைபிரசன்ன நெருப்பு நம்மில் அணைந்து விடாமல் இடையறாது அதனைப் பாதுகாப்பது.

நான் ஆள் அல்ல ஆன்மா என்ற விழிப்புணர்வைப் பெறுவது.

இந்த விழிப்புணர்வை நாம் பெற்றால் ஒரு ஒளி நம்மைச் சுற்றிலும் பிரகாசிக்கும்.

இது நமது பேச்சில், நமது செயல்பாட்டில், இரக்கத்தில், பார்வையில், பழகும் விதத்தில்

இடையறாது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

நமக்குள்ளே நாம் பரிபூரணமாக இசைவோடு இணைந்திருக்க இயலும்.

வார்த்தைகளைக் கடந்த இந்த பரிபூரணத்துக்குள் கடந்து செல்ல முயல்வோம்.

## அசையா நம்பிக்கைக்கான அழைப்பு

இந்தக்காலத்தில் நம்பிக்கையின் தேவையை நாம் அதிகம் உணர்கிறோம்.

**நம்பிக்கை இல்லை எனில் நாட்களைக் கடத்துவது**

**நமக்கு மிகக் கடினமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.**

நம்பிக்கை என்பது நமக்கு சாதகமான சூழலில்

ஏற்படும் மகிழ்ச்சியோ, பெருமிதமோ அல்ல.

காரியங்கள் அனைத்தும் கைநழுவிப்போகும்போதும்

எதிர்காலமே சூனியமாக நம்முன் காட்சிதரும்போதும்

காணும் இடம் எல்லாம் காரிருள் சூழ்ந்திருக்கும்போதும்

இனிமேல் ஒருபோதுமே விடியாது என்ற அவநம்பிக்கை தோன்றும்போதும்

எப்போது மாற்றம் வரும் என்ற எதிர்பார்ப்பு நிலைக்கும்போதும்

நிலைபெயரா உறுதியுடன் கடவுளில் ஊன்றியிருப்பது.

**எப்போது பள்ளி திறக்கும்?**

**எப்போது Lockdown முடிவுக்கு வரும்?**

**எப்போது Covid தொலையும்?**

**எப்போது தடுப்பூசி சந்தைக்கு வரும்?**

**எப்போது இயல்பு நிலை திரும்பும்?**

**எப்போது சுதந்திரமாக நடமாடலாம்?**

**எப்போது E – Pass இல்லாமல் பயணம் செய்யலாம்?**

**எப்போது நாம் விரும்பும் மனிதர்களைப் பார்த்து உரையாடலாம்?**

அப்பப்பா. முடிவில்லாமல் விரியும் இந்த '**எப்போது?**' நிலை

**இந்தக் காலத்திலும் அசையாமல் நிலைபெயராமல்**

**நம் கண்களை ஆண்டவர் மீது உறுதியாய் நிலைபெறச் செய்து**

**நாமும் நம்பிக்கையை சுவாசித்து வாழும் இடங்களிலும்**

**நம்பிக்கையை உருவாக்குவதே**

**இன்று அன்னை நமக்கு விடுக்கும் அழைப்பு என உணர்ந்து கொள்வோம்.**

## வேரோட்டமான போராட்டத்திற்கான அழைப்பு

**போராட்டம் அடைக்கல அன்னை சபைக்குப் புதிதான ஒன்று அல்ல.**

போராட்டத்தால் 3 நூற்றாண்டுகள் தன்னைத் தக்கவைத்துக்கொண்ட

வியத்தகு பாரம்பரியம் நம் சபையின் வேர்களுக்கு உண்டு.

போராட்டம் என்பதை இன்னும் நாம் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

சின்னச் சின்ன குழும முரண்பாடுகளில் சிக்குண்டு

விட்டில் பூச்சின் நெருப்பு விளையாட்டாய் மாறி

நாம் அதில் காணாமல் போகும் அறியாமை அல்ல நாம் கூறும் போராட்டம்

போராட்டம் என்பது ஒரு மௌனப் புரட்சி செய்வது.

தனக்குத் தானே கூடுகட்டிக் கொண்டு கூட்டுப்புழுவாய்

தவம் செய்யும் வண்ணத்துப்பூச்சியின் நிலை ஒத்தது அது.

எந்த விதமான அசைவும் இன்றி தன்னை கூட்டுக்குள்

அடைத்துக் கொண்டு வண்ணச் சிறகுகளுக்காய் அது போராடுகிறது.

நிலத்தில் ஊன்றப்பட்ட விதையின் போராட்டம் அது.

தன் உரு இழந்து செடியாய் புதிய வடிவம் பெற

மண்ணோடு போராடும் விதையின் போராட்டம் அது.

இலையுதிர் கால மரம் தன் உயிரைத் தக்கவைத்துக் கொள்ள

கோடை வெப்பத்தோடு போராடி தன் இலைகளை இழந்து

மொட்டையாய் நிற்கும் போராட்டம் அது.

மழை வந்ததும் அது புதிய துளிர்களைப் பிறப்பிக்கும்

என்ற நம்பிக்கைப் போராட்டம் அது.

இந்த போராட்டங்கள் காயங்களைத் தோற்றுவிப்பதில்லை.

தன்னில் புதிய மாற்றங்களைத் தோற்றுவிக்கிறது.

ஆன்மீக வேள்வியில் தன்னை எரித்துக் கொண்டு

பீனிக்ஸ் பறவைபோல சாம்பலிலிருந்தும் உயிர்ப்பது.

இதில் சுயநலக் கலப்பே இல்லை; தான் என்ற ஆணவமும் இல்லை.

**ஒட்டு மொத்தமாக இறைமைக்குள் நம்மை சரணடையச் செய்வதில்தான் இருக்கிறது அது.**

இதுதான் வேரோட்டமான போராட்டம்.

## மகிழ்ச்சியுடன் விரும்பும் ஏழ்மைக்கான அழைப்பு

ஏழ்மை என்பது என்ன என்பதை கொரோனா

நமக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டு வருகிறது.

அன்றாடம் ஒருவேளை உணவுக்கும் கஷ்டப்படும்

ஏழைகளின் எண்ணிக்கை நாளும் வளர்ந்து கொண்டே வருகிறது.

ஆனால் இந்த ஏழ்மையின் தாக்கம் நம்மை மட்டும் பாதிக்கவேயில்லை.

எந்தக் குழுமத்திலாவது அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது

என்ற கவலை என்றாவது எழுந்திருக்கிறதா?

அப்படியெனில் ஏழ்மையைப் பற்றிப் பேச நமக்கென்ன அருகதை இருக்கிறது

என்று எண்ணத் தோன்றுகிறது!

ஏழ்மை வார்த்தைப்பாடு எடுத்ததனால் நமக்கு குறைந்த பட்ச ஏழ்மையே இல்லாமல்

கடவுள் நம்மைப் பராமரிக்கிறாரோ என்றுதான் தோன்றுகிறது. இருந்தாலும்

**இந்தச் சூழலிலும் நம் மனதில் நன்றி உணர்வு உண்டா?**

இப்போது கூட நம் தேவைகளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறோமா?

இப்போது கூட குறைபட்டுக் கொள்கிறோமா?

அப்படியெனில் நம் நிலை எவ்வளவு கீழானது என எண்ணிப் பார்ப்போம்.

**நம் முன்னோர் ஏழ்மையை மகிழ்ச்சியுடன் விரும்பி ஏற்றனர்.**

**நம் மனநிலை என்ன?**

## இறைவனின் ஏழைகளாய் வாழ அழைப்பு

திருவிவிலியத்தில் அனாவீம் எனப்படுவது தான்

இறைவனின் ஏழைகள் என்று அர்த்தப்படுத்தப்படுகிறது.

இறைவனின் ஏழைகளுக்கான சில பண்புகளை திருவிவிலியம் அடையாளம் காட்டுகிறது.

இறைவனைத் தவிர வேறெந்த சொந்தமோ உறவோ இல்லாதவர்கள்.

இறைவனே எல்லாம் என்று அவரிடம் சரணடைந்தவர்கள்.

இறைவனின் பாதுகாப்பை மட்டுமே நம்பி வாழ்பவர்கள்.

என் வாழ்வில் என்ன நடந்தாலும் அது அவரால் நடக்கிறது என்ற புரிதல் உள்ளவர்கள்.

தவிப்பு, அங்கலாய்ப்பு, கவலை, கலக்கம் இவைகளை முற்றிலும் கடந்தவர்கள்.

எல்லாச் சூழல்களிலும் கடவுளின் கரத்தில்

பத்திரமாக இருக்கிறோம் என்ற நம்பிக்கை உடையவர்கள்.

கடவுளை மட்டுமே சார்ந்து வாழ்பவர்கள் :

தனக்கு வலுசேர்க்க ஒரு கூட்டத்தையோ, சாதியையோ,

ஆட்களையோ சேர்ப்பதைத் தவிர்த்து விடுபவர்கள்.

**மொத்தத்தில் எனக்கு எல்லாமே இறைவன்தான் என்ற மனநிலையில் வாழ்பவர்கள்.**

**இதைநோக்கி ஒரு அடியேனும் எடுத்துவைக்க இயலுமா?**

## மனதில் எளிமையாய் வாழ அழைப்பு

இந்தத் தலைமுறைக்கு மன எளிமையைக் கற்றுக் கொடுப்பது மிகக் கடினம்.

பிறக்கும் போதே நான் பெரியவள் முக்கியமானவள் என்ற எண்ணத்தோடுதான் பிறக்கிறோம்.

இதனை வளர்த்தெடுப்பதற்கான சூழல்களும் அனுபவங்களும் ஏராளம் கிடைக்கின்றன.

அதனால் நாம் ஒன்றுமில்லாதவர் எளியவர் என

ஏற்றுக் கொள்வது எல்லோருக்கும் அதிக சிரமமாக இருக்கிறது.

அதனால்தான் தான் என்ற ஆணவமும்

நான்தான் என்ற கர்வமும் உலகம் முழுமையையும் ஆட்டிப்படைக்கிறது.

துறவற இல்லங்களில் கொஞ்சம் கூடுதலாகவே அது தாண்டவமாடுகிறது.

எளிமை என்பது எப்படி இருக்க வேண்டும்?

எல்லோரும் நம்மை சுலபமாய் அணுகுவதற்குத் தாராளமான சூழல் தர வேண்டும்.

மற்றவர் தன் நிலையை வெளிப்படுத்தும்போது அப்படியே ஏற்க வேண்டும்.

பேச்சில் உள் அர்த்தங்கள் இல்லா வெளிப்படைத் தன்மை வேண்டும்.

உடன் வாழ்வோரை நம்ப வேண்டும். அவரின் இருப்புக்கு மதிப்பளிக்க வேண்டும்.

அவர்களின் உடனிருப்பில் மகிழ வேண்டும்.

இப்படி இல்லையெனில் மனஎளிமை ஒருபோதும் சாத்தியமில்லை.

## நம் சகோதர சகோதரிகளை அன்பு செய்வதற்கான அழைப்பு

பல சமயங்களில் நம் சமூகத்திலிருந்து

அன்பு வற்றிப் போய்க் கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் தோன்றுகிறது.

காரணம் பல சமயங்களில் அடுத்தவரைக் கண்டுகொள்ளாமல் இருப்பது

நமது இயல்பாக மாறி வருகிறது.

**மானுடத்தின் மையப்புள்ளியே அன்புதான்.**

**இன்னும் சொல்லப்போனால் உயிரினங்களின் மையப்புள்ளியே அன்புதான்.**

**பூமி தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை பூமியை**

**நிலைபெறச் செய்வதே அன்புதான்.**

ஆனால் இன்று வித்தியாசமான சூழல்கள் நம்மைக் கலங்கடிக்கின்றன.

கொரோனா வந்ததால் சொந்த குடும்பத்தாரே கைவிட்ட கதைகள்

நம் நெஞ்சை வலிக்கச் செய்கின்றன.

உடன் வாழ்வோர் மட்டில் அக்கறையற்ற போக்கும்

பொறுமை இழப்பும் மிகப்பெரிய வைரசாக மாறி

மானுடத்தை அச்சம் கொள்ளச் செய்கிறது.

இதற்கு நம் இல்லங்களும் விதிவிலக்கல்ல.

அன்பு கூர்ந்து அன்பை வளர்த்தெடுக்க தீவிரமாக முயல்வோம்.

**நமது கரிசனை, கனிவு, அடுத்தவர் இடர் கண்டு இரக்கம், உதவ வேண்டும் என்ற துடிப்பு,**

**ஆகிய மானுடப் பண்புகளை அக்கறையோடு பேணிக்காப்போம்.**

## திக்கற்றவர்களுக்குப் பணியாற்ற அழைப்பு

அடைக்கல அன்னை சபையின் ஆரம்பமுதலே

பின்னிப்பிணைந்த விழுமியம்தான் **திக்கற்றவர்களுக்கான பணி.**

**திக்கற்றவர்கள் யார்?** எல்லா திசைகளும் அடைக்கப்பட்டவர்கள்,

வாழ்வதற்கான எல்லா கதவுகளும் மூடப்பட்டவர்கள்.

நாமாகச் சென்று உதவவில்லை எனில் அங்கொரு சாவு சாத்தியமாகும்.

இப்படிப்பட்டவர்களையே இனம் கண்டு பணி செய்வதுதான் நமது சபையின் இயல்பு.

இந்த இயல்பிலிருந்து நாம் விலகிச் செல்வது போல் தோன்றுகிறது.

இதற்கு நமது ஐம்புலன்களும் கூர்மையாக இருக்க வேண்டும்.

பிறரால் கேட்கமுடியாத அழுகுரலை நாம் கேட்க வேண்டும்.

பிறர் பார்வையில் படாமல் தவறவிடப்பட்டவைகள் நம் கண்ணில் படவேண்டும்.

பிறர் தொடவிரும்பாதவைகளையும், நுகர அறுவறுப்பவற்றையும்

தொடவும் நுகரவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

அப்போது திக்கற்றோர் பணி சாத்தியமாகும்.

**அடைக்கல அன்னை தரும் இந்த அழைப்பை ஏற்று**

**நம் சபையின் விழுமியங்களை வாழ்வாக்க முயல்வோம்.**

**<u>அடைக்கல அன்னை நவநாள் தயாரிப்பு:</u>**

இந்த ஆண்டும் உங்களுக்கு அடைக்கல அன்னை நவநாட்களுக்காக தயாரிக்கப்பட்ட கையேடு அனுப்பப்படவில்லை. நம் சகோதரிகள் சீரிய சிந்தனையும் ஆற்றலும் கொண்டிருப்பதால் உங்கள் குழுமங்களில் நீங்களே நவநாள் தயாரிப்பு செய்து கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறேன். **ஒவ்வொரு நாளும் 20 முதல் 30 நிமிடங்கள் சபைத்தலைமை அன்னை சபையின் விழுமியங்கள் பற்றிய கருத்துரை வழங்குவார். அதற்கான Link உங்களுக்கு அனுப்பப்படும். அனைத்து சகோதரிகளும் குழுமமாக அதில் பங்கு கொள்வதற்கான நேரத்தை குறித்துக் கொள்ளுங்கள். அனைவரும் முழு ஈடுபாட்டோடு பங்குகொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.**

- ♣ குழுமத்தில் உள்ள அனைத்து சகோதரிகளும் இணைந்து தலைமை அன்னையின் உரையைக் கேட்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தலைமை அன்னையின் உரைக்குப்பின் சகோதரிகள் அந்தத் தலைப்புப் பற்றி உரையாட வேண்டும். இந்த விழுமியத்தைத் தனிவாழ்வில், குழுமவாழ்வில், பணித்தளத்தில் எவ்வாறு வாழ்வாக்குகிறோம் என்று உரையாடல் அமைய வேண்டும்.
- ♣ ஒவ்வொரு நாளும் ஒரு சகோதரியை நெறியாளராக நியமித்துக் கொண்டு உரையாடலில் ஈடுபடுங்கள்.
- ♣ ஒருபோதும் உரையாடலின் போது அடுத்தவர் இப்படிச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தக்கூடாது.
- ♣ கருத்துகள் பகிரப்பட வேண்டுமேயன்றி அவசியமின்றி பிரச்சனைகளை விவாதப்பொருளாக்க வேண்டாம்.
- ♣ இந்த உரையாடல்கள் தன்னிலை மாற்றத்திற்கு வழிகாட்டவே என்பதை நினைவில் கொள்வோம்.

  இந்த நவநாளில் அதிக நேரத்தில் அன்னையின் பண்புகளையும் அடைக்கல அன்னை சபையின் மதிப்பீடுகளையும் உள்வாங்கி வளர முயல்வோம்.

**<u>அடைக்கல அன்னையின் விழாவில் நாம் செயல்படுத்த வேண்டியவை:</u>**

- ♣ நவநாட்களில் ஒருநாள் ஒவ்வொரு சகோதரியும் முழுநாள் மௌனம் அனுசரித்து செபத்தில் ஈடுபடுவோம்.
- ♣ ஒவ்வொரு நாளும் ஒருமணி நேரத்தை சகோதரிகள் தனிசெபத்திற்கு ஒதுக்குவோம்.
- ♣ நம் சபையின் வழக்கப்படி நவநாளில் வரும் வெள்ளிக் கிழமையில் (07.08.2020) அன்று ஒருபொழுது அனுசரிப்போம்.
- ♣ நவநாளின் போது யாரையும் அழைக்காமல் எங்கேயும் செல்லாமல் இல்லத்திலேயே அமைதியாக இருந்து செபம், மௌனம், நல்லநூல்கள் படிப்பது, உரையாடுவது ஆகியவற்றில் நேரத்தைச் செலவிடுங்கள்.
- ♣ நவநாளில் குழுமங்களில் சமாதானம், மகிழ்ச்சி, பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வது மிக அவசியம்.

**<u>அர்த்தமுள்ள அடைக்கல அன்னை விழாக் கொண்டாட்டம்</u>:**

- ♣ உங்கள் இல்லங்களில் அடைக்கல அன்னை விழாவை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடுங்கள். விருந்தினர்களாக யாரும் அழைக்கப்பட வேண்டாம். நீங்களே குழுமமாக எளிமையாகக் கொண்டாடுங்கள்.
- ♣ வழக்கமாக அடைக்கல அன்னை விழாவினை நிறுவனங்கள் இணைந்து சிறப்பிப்போம். இந்த ஆண்டு அதற்கு வாய்ப்பில்லை. எனவே இந்த விழாவுக்கான உத்தேச செலவுத் தொகைக்கு உங்களால் எவ்வளவு நிதி ஒதுக்கமுடியுமோ அதனை ஒதுக்கி அந்தத் தொகைக்கு உணவுப் பொருட்கள் வாங்கி அருகாமையில் உள்ள திக்கற்ற ஏழைகளுக்கு உதவுங்கள்.
- ♣ அடைக்கல அன்னை விழாவினை முன்னிட்டு சபைத் தலைமை அன்னையும் ஆலோசகர்களும் மயிலாப்பூர், ஆழ்வார்ப்பேட்டை போன்ற நம் மூத்த சகோதரிகளின் இல்லங்களுக்குச் சென்று வாழ்த்துக்களையும், ஆசீரையும் பகிர்ந்து கொள்வது வழக்கம். இந்த ஆண்டு சூழல் காரணமாக எந்த இல்லத்திற்கும் வர இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ♣ சகோதரிகளும் சபைத் தலைமையகம், மாநிலத் தலைமையகம் சென்று வாழ்த்து தெரிவிப்பது வழக்கம். இந்த ஆண்டு இந்த நடைமுறையும் வேண்டாம் என அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.
- ♣ சகோதரிகளைக் குழுமம் குழுமமாக இணைத்து **online** மூலம் வாழ்த்து தெரிவிக்கலாம் என எண்ணுகிறேன். இதைப்பற்றி உங்கள் மாநிலத் தலைமைச் சகோதரிகள் வழியாக உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

**<u>அடைக்கலா உயர் கல்வி உதவித்தொகை</u>:**

இந்த ஆண்டு நமது நிறுவனங்கள் பெரும் நிதிநெருக்கடியைச் சந்திக்கின்ற காரணத்தால் அடைக்கலா உயர்கல்வி உதவித் தொகை இந்த ஆண்டு வழங்கப்பட இயலாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**<u>மாற்றம் பற்றி</u>:**

இந்த ஆண்டு மாற்றம் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. மார்ச் 25 முதல் இன்றுவரை சென்னை Lockdown ல்தான் இருக்கிறது. பிறமாவட்டங்களில் தொடக்கத்தில் குறைவாக இருந்த கெடுபிடிகள் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. நாம் தமிழகம் முழுவதும் பரவி இருப்பதால் எல்லோரின் நிலையையும் எல்லா மாவட்ட கல்வி அலுவலகங்களின் விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டியிருப்பதால் சகோதரிகள் மாற்றம் செய்வதில் குழப்பங்கள் நிகழ்கின்றன என்பதை புரிந்துகொள்ளுங்கள். இருந்தாலும் அடைக்கல அன்னை நவநாட்களில் நாம் புதிய குழுமத்தில் இணைய வேண்டும் என்பதே எம் ஆவல். அதற்கு ஏதுவாக உங்கள் Service break ஏற்பட்டுவிடாமல் கரிசனையோடு காரியம் ஆற்ற அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அரசுச் சூழல்கள் நமக்கு சாதகமாக இல்லை என்பதைப் புரிந்துகொண்டு விவேகத்தோடும் கவனத்தோடும் நடந்து கொள்ள அறிவுறுத்துகிறேன்.

**<u>சபைத்தலைமை அன்னையின் பணித்திட்டம்:</u>**

இந்த மாதத்தோடு (July) Lockdown முடிவதாக இருந்தால் ஆகஸ்டு 15 – ஆம் தேதிக்குப்பின் எமது Visitation – ஐ ஆரம்பிக்கலாம் என விழைகிறேன். அப்படி சூழ்நிலை சாதகமாக இருந்தால் தஞ்சை மாநில இல்லம், பெத்தானியா மற்றும் தஞ்சை நகரில் உள்ள இல்லங்கள் உங்கள் ஆவணங்களை தயார்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். சரியான அறிவிப்பு கிடைத்தபின் இல்லப்பார்வைக்கான தேதி உங்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**அடைக்கலத்தாய் நம் ஒவ்வொருவரையும் அபரிமிதமாக ஆசீர்வதிக்க**

**அவளது நாமவிழா நமக்கு ஆன்மீக எழுச்சியாய் அமைய ஒவ்வொருவரையும்**

**உள்ளம் நிறைந்து வாழ்த்துகிறேன்!!!**




**அடைக்கல அன்னை பெருவிழா நல்வாழ்த்துக்கள்!**

**அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**